වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# Annual Performance Report

2015

කාන්තා හා ළමා කටයුතු අමාත්‍යාංශය

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு

Ministry of Women and Child Affairs

# *உள்ளடக்கம்*

அறிமுகம்.............................................................................................................. 03

நோக்கு, செயற்பணி, நிறுவன ஒழுங்கமைப்பு........................................................ . 04

பிரதான எதிர்பார்ப்புகள், உபாய முறையிலான அபிவிருத்தி நோக்கங்கள், பிரதான செயலாற்றுகைச் சுட்டிகள் …................................................................... 05-06

2015.12.31 ஆம் திகதிக்கு பதவியணி விபரம்.....................................................06-08

2015 ஆம் ஆண்டின் சர்வதேச தினங்களைக் கொண்டாட .................................. 09

**துறைசார் செயலாற்றுகை**

நிருவாகப் பிரிவு.................................................................................................. 10-12

கணக்குகள் பிரிவு............................................................................................. 13-15

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு...................................................................15-17

திட்டமிடல் பிரிவு.........................................................................................18-19

அபிவிருத்திப் பிரிவு..................................................................................20-25

இலங்கை மகளிர் பணியகம்..........................................................................26-34

தேசிய மகளிர் குழு……....................................................................................35-38

சிறுவர் செயகலம்..........................................................................................39-47

*மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின்*

*2015 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை*

*2012 செப்டம்பர் 12 ஆம் திகதிய*

*அரசாங்க நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 402 இன்*

*அறிவுரைக்கமைய தயார் செய்யப்பட்டுள்ளது.*

# அறிமுகம்

இலங்கை பெண்கள் மற்றும் சிறுவர் சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.09.21 ஆம் திகதிய 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பொறுப்பளிக்கப்பட்ட பணிகளை அமுல்படுத்துவதற்கு ஏற்புடையவாறு அமைச்சுக்கு விசேட செயற்பணிகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் மற்றும் பெண்களுக்கு எதிரான சகல வகையிலுமான துன்புறுத்தல்களை ஒழிப்பது பற்றிய பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மகளிர் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு சிறுவர் மற்றும் பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான சட்டங்களை ஆக்குதல், கொள்கைகளைத் தயார் செய்தல், நிகழ்ச்சித்திட்டங்களை வழிநடாத்தல் ஆகிய பணிகள் அமைச்சு மற்றும் அதற்கு உரித்தான நிறுவனங்களினால் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பான சட்டங்கள், கொள்கைகளை வகுப்பதற்குப் பங்களிப்புச் செய்தல், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல், அவற்றைப் பின்னாய்வு செய்தல் மற்றும் எதிர்காலக் கொள்கைகளை வகுக்கப் பங்களிப்புச் செய்வதற்கு ஆராய்ச்சிகளை நடாத்துவதும், சிறுவர்கள் மற்றும் பெண்களின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்கின்ற தரவுக்கட்டமைப்பினைத் தயார் செய்வதும் 2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட பிரதான பணிகளாகும்.

மேலும் 2015 ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பெண்கள் மற்றும் சிறுவர்களின் அபிவிருத்திக்காக அமுல்படுத்தப்பட்ட ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை சிறுவர் மந்தபோஷாக்கினைத் தடுப்பதற்கு கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு போஷாக்கு மிக்க உணவுப் பொதியொன்றை மாதாந்தம் பெற்றுக்கொடுக்கும் விசேடமான நிகழ்ச்சித்திட்டம் என்ற வகையில் வெற்றிகரமான முன்னேற்றத்தைப் பெற்றுக்கொடுத்துள்ளது. முன்பள்ளிப் பருவச் சிறுவர்களை அரவணைப்பு மற்றும் அபிவிருத்திக்கு உலக வங்கியின் அனுசரணையின் கீழ் (கடன்) முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி விசேட கருத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர், மகளிர் அபிவிருத்தி அலகை வலுவூட்டல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள், பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்களைத் தடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் மற்றும் பெண்கள் அரவணைப்பு நிலையங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் இந்த ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டன. விதவைகள் மற்றும் குடும்பத் தலைவிகளாகவுள்ள பெண்களுக்கு பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு தேசிய செயலகமொன்று கிளிநொச்சி மாவட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் அரச சார்பற்ற, தனியார் ஆகிய சகல துறைகளினதும் கூட்டுப் பங்களிப்புடனும் ஒருங்கிணைப்புடனும் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான Angel's Network அமுல்படுத்தப்பட்டமை, 1929 எனும் சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை, 1938 எனும் மகளிர் உதவித் தொலைபேசிச் சேவையினை வலுவூட்டுவதும் இந்த ஆண்டில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.


## நோக்கு

சிறுவர் மற்றும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற பெருமை மிகு தேசத்தை நோக்கி

## செயற்பணி

பெருமை மிகு தேசத்திற்காக சமூக பொருளாதாரத்தை வலுவூட்டல், சமூகப் பெறுமானங்களை மேம்படுத்தல் மற்றும் உரிய சகல தரப்பினர்களினதும் உபாய முறையிலான கூட்டுப் பங்கேற்றலைப் பெற்றுக்கொள்வதன் மூலம் சிறுவர் மற்றும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நல்லாட்சிப் பயன்பாடுகளை உறுதிப்படுத்துகின்றவாறு குறித்த தேவைகளை ஏற்பாடுசெய்தல் மற்றும் கொள்கைகளை தயார்செய்தல், அமுல்படுத்தல் மற்றும் ஒழுங்குறுத்தல்.

## நிறுவன ஒழுங்கமைப்பு



## பிரதான எதிர்பார்ப்புகள்

- சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருந்ததிக்கான தேசிய கொள்கையைத் தயார் செய்தல்.
- பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்திக்கான தேசிய திட்டத்தைத் தயார் செய்தல்.
- சிறுவர் மற்றும் பெண்களின் அபிவிருத்திக்கான பொறிமுறையைத் தயார் செய்து அமுல்படுத்தத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல்.
- அரசாங்க நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் தனியார்த்துறையினை ஒருங்கிணைப்புச் செய்து சிறுவர் மற்றும் பெண்களின் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- சிறுவர் மற்றும் பெண்களின் பாதுகாப்பு, அபிவிருத்தக்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- அமைச்சு மற்றும் அதற்குரித்தான நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை கண்காணிப்புச் செய்தல்.
- சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பில் செயற்படுவதற்கு இலங்கை கட்டுப்பட்டுள்ள சகல சர்வதேச சமவாயங்கள் மற்றும் இணக்கப்பாடுகளுக்கான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்தல்.
- சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிக்கத்தேவையான சட்ட ரீதியான மற்றும் தேசிய கொள்கைகளைக் கொண்ட சூழல்களைத் தாபித்தல்.

## உபாய முறையிலான அபிவிருத்தி நோக்கங்கள்

- உயர் தரம் மிக்க முன்பள்ளிப் பரவ அபிவிருத்தி மற்றும் அரவணைப்புச் சேவையை உறுதிப்படுத்தல்.
- சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களின் நலன்புரிக்காக உரிமைகளை உறுதிப்படுத்தல் மற்றும் அவர்களை சமூகமயப்படுத்தல்.
- சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதும் குறைப்பதும்.
- பாதுகாப்பற்ற பெண்களைக் கொண்ட குடும்பங்களை அபிவிருத்தி செய்தல்.
- சிறுவர்கள் மற்றும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சட்ட ரீதியான மற்றும் கொள்கைசார் தலையீடுகள்
- இலங்கை கட்டுப்பட்டுள்ள சர்வதேச சமவாயங்களுக்குப் பொருத்தமான உள்நாட்டு சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி உபாய முறைகளைத் தாபித்தல்.

## பிரதான செயலாற்றுகைச் சுட்டிகள்

01. 2015 ஆம் ஆண்டளவில் இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள சகல பாலர் பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கான ஆகக்குறைந்த தரநியமங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல்.
02. 2015 ஆம் ஆண்டளவில் இலங்கையிலுள்ள சிறுவர் இல்லங்களில் 90 சதவீதமானவை சிறுவர்களுக்கு நட்புறவான சூழலைக்கொண்ட 'A' தரத்தைச் சேர்ந்த இல்லங்களாக மாற்றியமைக்கப்படல்.
03. தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகாரசபையின் பிரதான நடவடிக்கைப் பிரிவினை வலுவூட்டுவதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதும் குறைப்பதும்.
04. விதவைகள் மற்றும் வீட்டுத்தலைவிகளாகவுள்ள பெண்களைக் கொண்ட குடும்பங்களில் 50 சதவீதத்திற்கு புதிய வாழ்வாதார அபிவிருத்தி வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.
05. சிறுவர்கள் மற்றும் பெண்களின் உரிமைகளையும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துவதற்கான சட்ட ரீதியான, கொள்கைசார் தலையீடுகளை மேம்படுத்தல்.
06. சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பில் செயற்படுவதற்கு இலங்கை கட்டுப்பட்டுள்ள சகல சர்வதேச சமவாயங்கள் மற்றும் இணக்கப்பாடுகளுக்காக தயார் செய்யப்பட்டுள்ள சட்டங்கள், கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை.

## பதவியணி விபரம் (2015.12.31 ஆம் திகதிக்கு)


| தொ.இல. | பதவி | சேவை | வகுப்பு தரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணியினரின் எண்ணக்கை |
|---|---|---|---|---|---|
| **சிரேஷ்ட மட்டம்** | | | | | |
| **01.** | செயலாளர் | இ.நி.சே. | விசேட | 01 | 01 |
| **02.** | மேலதிக செயலாளர் (நிருவாம், நிதி) | இ.நி.சே. | விசேட | 01 | 01 |
| **03.** | மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) | இ.நி.சே. | விசேட | 01 | 01 |
| **04.** | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | இ.நி.சே. | SL-1 | 01 | 01 |
| **05.** | பிரதம கணக்காளர் | இ.க.சே | SL-1 | 01 | 01 |
| **06.** | பிரதம உள்ளக கணக்காய்வாளர் | இ.க.சே. | SL-1 | 01 | 01 |
| **07.** | பணிப்பாளர் | இ.நி.சே. | SL-1 | 02 | 02 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **08.** | பணிப்பாளர் (திட்டமிடல்) | இ.தி.சே | SL-1 | 01 | 01 |
| 09. | கணக்காளர் | இ.க.சே | SL-11/111 | 02 | 01 |
| 10. | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | இ.நி.சே | SL-11/111 | 05 | 05 |
| 11. | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | இ.தி.சே | SL-11/111 | 02 | 04 |
| 12. | உதவிச் செயலாளர் | இ.நி.சே. | SL-1 11/111 | 02 | 02 |
| 13. | உதவிப் பணிப்பாளர்(ICT) | இ.த.தொ.சே | 1 வகுப்பு 111 தரம் | 01 | 0 |
| 14. | சட்ட அலுவலர் | திணைக்களம் சார். | 11/111 | 03 | 01 |
| | **மூன்றாம் மட்டம்** | | | | |
| **15.** | நிருவாக அலுவலர் | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை (சிறப்புத் தரம்) | MN-07 | 01 | 0 |
| **16.** | ஆராய்ச்சி அலுவலர் | திணைக்களம் சார் | MN-06 | 01 | 0 |
| **17.** | மொழி பெயர்ப்பாளர் | மொழிபெயர்ப்பாளர் சேவை | MN-06 | 02 | 01 |
| **18.** | ஆலோசனை அலுவலர் | திணைக்களம் சார் | MN-05 | 13 | 10 |
| | **இரண்டாம் மட்டம்** | | | | |
| **19.** | செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் | தற்காலிகளம் | - | 01 | - |
| **20.** | அபிவிருத்தி உதவியாளர் | இணைந்த சேவைகள் | MN-04 | 24 | 23 |
| **21.** | மகளிர் அபிவிருத்தி அலுவலர் | திணைக்களம் சார் | MN-04 | 335 | 306 |
| **22.** | வரவுசெலவுத் திட்ட உதவியாளர் | இணைந்த சேவைகள் | MN-04 | 01 | 01 |
| **23.** | அபிவிருத்தி அலுவலர் | அபிவிருத்தி அலுவலர் சேவை | MN-04 | 516 | 274 |
| **24.** | நூலகர் | நூகர் சேவை | MN-03 | 01 | 0 |
| **25.** | அரச முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சே (1,11,111) | MN-02 | 40 | 29 |
| **26.** | நூலக உதவியாளர் | திணைக்களம் சார் | MN-01 | 01 | 01 |
| **27.** | வரவேற்பு அலுவலர் | திணைக்களம் சார் | MN-01 | 01 | 01 |
| **28.** | நிவாரண சகோதரி | திணைக்களம் சார் | MN-01 | 134 | 125 |
| **29.** | விடுதிப் பொறுப்பாளர் | திணைக்களம் சார் | MN-01 | 02 | 01 |
| **30.** | விடுதிப் பொறுப்பாளர் (உதவி) | திணைக்களம் சார் | MN-01 | 02 | 01 |
| **31.** | தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் உதவியாளர் | த.தொ.தொ.சேவை | MT-01 | 03 | 01 |
| **32.** | வீடியோ கெமரா கலைஞர் | தற்காலிகம் | MT-01 | 01 | 01 |
| **33.** | புகைப்படக் கலைஞர் | தற்காலிகம் | MT-01 | 01 | - |
| | **ஆரம்பம்** | | | | |
| **34.** | சாரதி | இணைந்த சாரதிகள் சேவை | PL-03 | 30 | 26 |
| **35.** | கெமரா கலைஞருக்கான | தற்காலிகம் | PL-01 | 01 | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உதவியாளர் | | | | |
| **36.** | அலுவலக சிற்றூழியர் | அ.சி.சே. | PL-01 | 28 | 26 |
| **37.** | ஆலோசனைச் சேவைத் தொழிலாளி | திணைக்களம் சார் | PL-01 | 12 | 11 |
| **38.** | சமயற்காரர் | திணைக்களம் சார் | PL-01 | 02 | 0 |

**சிறுவர் செயலகம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **39.** | பணிப்பாளர் | இ.நி.சே. | SL-1 1 | 01 | 01 |
| **40.** | உதவிப் பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர் | இ.நி.சே. | SL-11/111 | 04 | 02 |
| **41.** | உதவிப் பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர் | இ.தி.சே. | | - | 02 |
| **42.** | முன்பள்ளிப் பரவ அபிவிருத்தி உதவியாளர் | அ.உ.சே. | MN-04 | 373 | 334 |
| **43.** | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சே. (1,11,111) | MN-02 | 03 | 03 |
| **44.** | சாரதி | இணைந்த சாரதிகள் சேவை | விசேட | 02 | 02 |
| **45.** | அலுவலக சிற்றூழியர் | அ.சி.சே. | விசேட | 03 | |



# சர்வதேச தினங்களைக் கொண்டாடுதல்

## சர்வதேச மகளிர் தினம்

தொனிப்பொருள் - "பெண்களுக்கு நல்லதொரு நாடு"

2015 சர்வதேச மகளிர் தினம் மார்ச்சு மாதம் 08 ஆம் திகதி கௌரவ பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் அனுராதபுரம் சல்காது மைதானத்தில் இடம்பெற்றது. இந்த வைபவத்தை முன்னிட்டு பெண்களின் உற்பத்திகளுக்கான சந்தைவாய்ப்பினை ஏற்படுத்தும் பொருட்டு உற்பத்திகளுக்கான சந்தைக் கண்காட்சியொன்றும் நடாத்தப்பட்டது. மேலும் மருத்துவ நிபுணர்களின் சிகிச்சை முகாம், நடமாடும் சேவை, இரத்த தானம் வழங்கும் முகாம், தொழில் பயிற்சி வழிகாட்டல்கள் மற்றும் நிதிச் சேவைகளை வழங்குதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.



## உலக சிறுவர் தினம்

தொனிப்பொருள் - "சிறுவர் நட்புறவுச் சூழல் - உலகை மிளிரச்செய்யும் தேசம்"

2015 ஆம் ஆண்டின் உலக சிறுவர் தின தேசிய வைபவம் சிறுவர் இராஜாங்க அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டதுடன், இது யாழ்ப்பாணம் வீரசங்க மண்டபத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது. இந்த வைபவத்தை முன்னிட்டு பிரதேச செயலாளர் மட்டதில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களும் இரசனை நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டன. மேலும் யாழ்ப்பாணம் சிறுவர் பூங்காவில் சிறுவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களும் இடம்பெற்றன.



## சர்வதேச சிறுமியர் தினம்

ஒக்டோபர் 11 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற இந்த தேசிய தினத்தை முன்னிட்டு பிரதேச மட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. "பரிகல்பண" எனும் நாடளாவிய சித்திரப் போட்டியும், நாடகம் மற்றும் விவாதப் போட்டிகளும் பாடசாலைகள் மற்றும் சிறுவர் களகங்களிலுள்ள சிறுவர்களுக்காக நடாத்தப்பட்டன.

# துறைசார் செயலாற்றுகை

## நிருவாகப் பிரிவு

### பிரதான செயற்பணி

01. அமைச்சின் பதவியணியினர் சம்பந்தமான தாபன நடவடிக்கைகள், ஒருங்கிணைப்பு மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளைப் பேணிவரல்.

02. அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதிவிகளில் ஏற்படுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல்.

03. அமைச்சின் கருத்திட்டங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றத்தேவையான புதிய பதவிகளை நி.பி. 71 இற்கமைய ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

04. பொது நிருவாக சுற்றறிக்கை 6/2006 இற்கமைய திணைக்களம் சார் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் நடைமுறைகள்/ பதவியுயர்த்தும் நடைமுறைகளுக்கான திருத்தங்களைத் தயார் செய்து அங்கீகரித்துக்கொள்ளல், மற்றும் பதவியுயர்த்தும் முறையியலை அமுல்படுத்தல், புதிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்புச் செய்யும் நடைமுறையினைத் தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளல்.

05. அமைச்சுக்கு உரித்தான பிரிவுகள்/நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பினை மேற்கொண்டு பாராளுமன்ற வினாக்களுக்கு பதிலளித்தல் மற்றும் வேறு சம்பந்தப்பட்ட பணிகளை மேற்கொள்ளல் (வரவுசெலவுத் திட்ட குழநிலை, கணக்குகள் குழு, பொது மனுக் குழு, ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணைகள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள்).

06. அமைச்சரவை விஞ்ஞாபனம் சம்பந்தமாக அமைச்சரவை அலுவலகத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

07. மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அமைச்சரின் அலுவலகத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

08. அமைச்சர் அலுவகல மற்றும் இராஜாங்க அமைச்சர் அலுவலகத்திற்கு உரித்தான பதவியணியினரின் தாபன நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

09. தபால் பிரிவுக்கு விநியோகிப்பதற்கும் அனுப்புவதற்கும் கிடைக்கும் கடிதங்களை தபால் செய்தல்.

10. வழங்கல் மற்றும் சேவைகளைப் பேணி வரல் (பாதுகாப்பு, சுத்தம் செய்தல், மின் பட்டியல், நீர்ப் பட்டியல், பத்திரிகைகள், போக்குவரத்து வசதிகள், தொலைபேசி, புகையிரத வாரச்சீட்டுகள், புகையிரத பயணச்சீட்டுகள், உபசரணை நடவடிக்கை, வாகனக் காப்புறுதி).
11. வாகனத் தொகுதியைப் பேணி வரல், வாகனங்களை அகற்றல், புதுப்பித்தல், புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்தல்.
12. கட்டிடங்கள், மற்றும் உபகரணங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள்.
13. முற்பணக் கடன், உற்சவ முற்பணம், விசேட முற்பணம், அனர்த்தக் கடன், ஆதனக்கடன், அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் தாபன நடவடிக்கைகள்.
14. பியகம மகளிர் செவன விடுதியின் நடவடிக்கைகள்.
15. அமைச்சின் பதவியணியினருக்கு தாபன மற்றும் நிதி நடவடிக்கைகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

## ➢ பதவியணியினரின் நடவடிக்கைகள்

2015.12.31 ஆம் திகதிக்கு அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட மொத்தப் பதவியணியினரின் எண்ணிக்கை 1559 ஆகும். அன்றைய தினத்தில் வெற்றிடமாகக் காணப்பட்ட எண்ணிக்கை 356 ஆகும். 2015 ஆம் ஆண்டில் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு புதிய இரண்டு அலுவலர்களை பெற்றுக்கொள்ள முடிந்தது. அதற்கு மேலதிகமாக தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளின் அத்தியவசியத் தன்மையினைக் கவனத்திற்கொண்டு, தற்காலிகமான பதவிநிலை மட்டத்திலான அலுவலர் ஒருவரின் சேவைக்கு இணைப்புச் செய்துகொள்ளவும். ஆராய்ச்சி அலுவலர் பதவி மற்றும் சட்ட அலுவலர் பதவி ஆகிய இரண்டு பதவிகளை அங்கீகரித்துக்கொள்ளவும் முடிந்ததுடன், மேற்படி ஆட்சேர்ப்புக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பதவியணியின் சகல அலுவர்களினதும் சுயவிபரக் கோவைகளை முறையாகப் பேணிவரல், இற்றைப்படுத்தல், நாளாந்த விடுப்பு பற்றிய கடமைகள், சம்பள ஏற்றங்களைப் பெற்றுக்கொடுத்தல், இடமாற்றம், ஓய்வுறுத்தல் போன்ற நிருவாக நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் அமைச்சரின் பதவியணியினர் மற்றும் இராஜாங்க அமைச்சரின் பதவியணியினரின் தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகளும் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அமைச்சுக்குரித்தான சகல அலுவரர்களினதும் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கு அபிவிருத்தி, தொழில்நுட்ப ஆற்றல் மற்றும் மொழி நிபுணத்துவத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் உள்நாட்டு

மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிப் பாடநெறிகளில் அலுவலர்கள் தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, சாரதிகளுக்கு வாகனப் பராமரிப்பு பற்றிய இயந்திரவியல் பயிற்சி, உற்பத்தித் திறன் முறையியல் பற்றி பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவித்தல்,MS Excel advanced analysis tools பயிற்சி, வேலைக் கற்கை மற்றும் முறையியல் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள்,

அலுவலர்களின் உளவியல் அபிவிருத்திக்கான இசை இரசனை நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற உள்நாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி அலுவலர்கள் வெளிநாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## ➢ இணை நிறுவனங்களின் நடவடிக்கைகள்

அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆகிய நிறுவனங்களின் நிருவாக நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல், வழிகாட்டல் தொடர்பிலும் நிருவாகப் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேற்படி நிறுவனங்களுக்கு பொது நிருவாக சுற்றறிக்கை 6/2006 இற்கமைய ஆட்சேர்ப்புச் செய்யும் நடைமுறையினைத் திருத்தியமைத்தல், பதவியணியில் பதவிகளை ஏற்படுத்தல், நியமனம் செய்தல், பதவியுயர்வு வழங்குதல், பதவியணியினரின் சேவை சார் சிக்கல்கள் பற்றி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பிலான நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே இந்த நிறுவனங்களின் அலுவலர்களது வெளிநாட்டுச் சுற்றுலாக்கள், புலமைப்பரிசில்கள், பயிற்சிப் பாடநெறிகளுக்கு அங்கீகாரம் பெற்றுக்கொடுப்பதற்கும் உரியவாறு விடுப்புகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ➢ உற்பத்தித் திறன் மேம்படுத்தல் நடவடிக்கைகள்

வினைத்திறன் மிக்க மக்கள் சேவை மற்றும் மனங்கவர் அலுவலக சூழலை ஏற்படுத்துவதற்காக அமைச்சு உற்பத்தித் திறன் மேம்படுத்தல் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ளது. அவ்வாறே தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடாத்தப்படுகின்ற தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் போட்டியில் பங்கேற்றதுடன், அதில் விசேட திறமைக்கான சான்றிதழ்களையும் வென்றெடுக்க முடிந்தது.

## கணக்குகள் பிரிவு

### பிரதான செயற்பணி

நிதி விடயம் தொடர்பாக திறைசேரியுடன் முறையான ஒருங்கிணைப்பினை ஏற்படுத்திக்கொண்டு மேற்படி திட்டத்தினை அமுல்படுத்தும் நடவடிக்கைகள், கருத்திட்டங்கள் உள்ளடங்கலாக அமைச்சின் கணக்குகள் மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகள் தொடர்பில் திறைசேரியின் அரசாங்கக் கணக்குகள் மற்றும் திறைசேரி நடவடிக்கைத் திணைக்களத்திற்குத் தேவையான தகவல்களைத் தயார் செய்தல், அமைச்சின் வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு, முற்பண 'பீ' கணக்கு, மதிப்பீடு மற்றும் குறைநிரப்பும் மதிப்பீட்டினை காலத்திற்குக் காலம் தயார்செய்து தேசிய வரவுசெலவுத் திட்டத்தினை திணைக்களத்திடம் சமர்ப்பித்தல், அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கருத்திட்டங்கள், நியாயாதிக்க நிறுவனங்களின் வருடாந்த வரவுசெலவுத் திட்டங்கள் மற்றும் குறைநிரப்பு மதிப்பீடுகளைத் தயார் செய்வதை ஒருங்கிணைப்புச் செய்தல், அமைச்சு உள்ளடங்கலாக அதன் கீழுள்ள சகல நிறுவனங்களினதும் உத்தியோகபூர்வ வங்கிக்

கணக்குகளை ஆரம்பித்தல், பேணிவருதல், மூடிவிடும் நடவடிக்கைகள், அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் செயற்றிட்டம், மூலதனத் திட்டத்தைத் தயார் செய்தல், கட்டுநிதி, மதிப்பீட்டு பாய்ச்சல் கூற்றினைத் தயார்செய்தல் மற்றும் திறைசேரி நடவடிக்கைத் திணைக்களத்திடம் சமர்ப்பித்தல், ஒட்டுமொத்த வரவுசெலவுத் திட்ட ஏற்பாடுகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் பல்வேறு கருத்திட்டங்கள் உள்ளடங்கலாக ஏனைய நிறுவனங்களுக்கு திட்டமிட்டு கட்டுநிதியை விடுவித்தல், வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்கள் தொடர்பிலான நிதிசார் கட்டுப்பாடு, வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கு, முற்பணக் கணக்கு, வைப்புக் கணக்கு, கருத்திட்டங்களின் இறுதிக் கணக்குகளைச் சமர்ப்பித்தல், அமைச்சு தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வு வினாக்களுக்கு பதில் அனுப்புதல், வருடாந்த களஞ்சிய ஆய்வு நடவடிக்கைகள் போன்றவற்றை மேற்கொள்ளல்.

### ஒதுக்கீட்டுக் கணக்கு 2015

தலைப்பு 120 – மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சின் 2015 ஆம் ஆண்டுக்கான 2015.12.10 ஆம் திகதிய 245/2015 ஆம் இலக்க அரசாங்கக் கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள DGSA1 ஆம் இலக்கம் மாதிரிப்படிவத்திலிருந்து 10 ஆம் இலக்க மாதிப்படிவம் வரையும், குறிப்பு (i) முதல் குறிப்பு (iv) (அ) மற்றும் (ஆ) வரையான தகவல் கொள்கையை உள்ளடக்கியதாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், 2015 இன் 1 ஆம் இலக்க மற்றும் 2015 இன் 15 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தம்) சட்டங்களினால் திருத்தியமைக்கப்பட்ட 2014 இன் 47 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் மற்றும் வேறு நியாயாதிக்க ஏற்பாடுகளுக்கு, 2015 இன் வருடாந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்

பிரமாணக் கோவையின் ஏற்பாடுகளை உள்ளடக்கி அரசாங்க நிதி மற்றும் நிருவாக ஒழுங்கு விதிகளுக்கமைய ஒதுக்கீட்டுக் கணக்குத் தயார் செய்யப்பட்டு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 2015 ஆம் ஆண்டின் நிதிசார் முன்னேற்றம்

| நிகழ்ச்சித் திட்ட இலக்கம் | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டு ஒதுக்கம் | குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கம் | நி.பி. 66 மற்றும் 69 இற்கமைய மாற்றல்கள் | தேறிய ஒதுக்கம் | மொத்தச் செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| | மீண்டெழுவன | | | | | |
| 1 | செயற்பாட்டு நடவடிக்கைகள் | 607,810,000 | 0 | -15,835,350 | 591,974,650 | 582,504,347 |
| 2 | அபிவிருத்தி நடவடிக்கைகள் | 3,273,500,000 | 500,000,000 | 14,217,540 | 3,787,717,540 | 3,135,120,054 |
| | உப மொத்தம் (மீண்டெழுவன) | 3,881,310,000 | 500,000,000 | -1,617,810 | 4,379,692,190 | 3,717,624,401 |
| | மூலதனம் | | | | | |
| 1 | செயற்பாட்டு நடவடிக்கைகள் | 82,200,000 | 0 | 0 | 82,200,000 | 68,020,981 |
| 2 | அபிவிருத்தி நடவடிக்கைகள் | 555,883,000 | 25,000,000 | 1,617,810 | 582,500,810 | 372,219,229 |
| | உப மொத்தம் (மூலதனம்) | 638,083,000 | 25,000,000 | 1,617,810 | 664,700,810 | 440,240,210 |
| | முழு மொத்தம் | 4,519,393,000 | 525,000,000 | 0 | 5,044,393,000 | 4,157,864,611 |

## செலவின நிதியீட்டல்

| | | நிகழ்ச்சித்திட்டம் 1 | | முழு மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|
| குறியீடு | குறியீட்டு விபரம் | தேசிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | செலவின விகிதம் |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | % |
| 11 | உள்நாட்டு நிதி | 674,174,650 | 650,525,328 | 674,174,650 | 650,525,328 | 96 |
| | மொத்தம் | 674,174,650 | 650,525,328 | 674,174,650 | 650,525,328 | |

| | | நிகழ்ச்சித்திட்டம் 2 | | முழு மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|
| குறியீடு | குறியீட்டு விபரம் | தேசிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | செலவின விகிதம் |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | % |
| 11 | உள்நாட்டு நிதி | 4,138,585,350 | 3,466,647,721 | 4,138,585,350 | 3,466,647,721 | 84 |
| 13 | வெளிநாட்டு உதவி (கொடை) | 231,633,000 | 40,691,562 | 231,633,000 | 40,691,562 | 18 |
| | மொத்தம் | 4,370,218,350 | 3,507,339,283 | 4,370,218,350 | 3,507,339,283 | |

## அரசாங்க அலுவலர்களின் முற்பண “பீ” கணக்கு

| விபரம் | உச்ச செலவின எல்லை (ரூபா.) | ஆகக் குறைந்த பெறுகை எல்லை (ரூபா.) | உச்ச வரவு நிலுவை எல்லை (ரூபா.) |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள எல்லைகள் | 40,000,000.00 | 17,000,000.00 | 85,000,000.00 |

# உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

## பிரதான செயற்பணி

- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களில் நிதி மற்றும் தாபன நடவடிக்கைகளை கணக்காய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடல்.
- தவறுகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக அமைச்சினுள் அமுல்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாட்டு முறைகள் வெற்றியளித்துள்ளதா என்பதைத் தேடிப்பார்த்தல் மற்றும் அது பற்றிய அவதானிப்புகள் மற்றும் பிரேரணைகளைச் சமர்ப்பித்தல்.
- அமைச்சின் கணக்குகள், ஏனைய அறிக்கைகளின் நம்பகத் தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ளல் மற்றும் அமைச்சின் சொத்துக்களை சகல வகையிலும் நட்டங்களிலிருந்து உச்சளவாக பாதுகாக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி ஆராய்தல் மற்றும் அறிக்கையிடல்.
- அமைச்சின் கீழுள்ள பிரிவுகளில் பின்வரும் நடவடிக்கைகள் தொடர்பிலான முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு மூன்று (03) மாதங்களுக்கு ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்.
    - வருடாந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதன் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதும், பலவீனமான செயலாற்றுகையினைத் தவிர்த்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை சமர்ப்பிப்பதும்.
    - கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளியிடப்படுகின்ற கணக்காய்வு வினாக்கள்/கணக்காய்வு அறிக்கைகளுக்கான பதில்களைச் சமர்ப்பித்தல்.
    - வருடாந்த வழங்கல் திட்டம் பற்றிய சமர்ப்பிப்புகள்
    - வருடாந்த அறிக்கைகள்/செயலாற்றுகை அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
    - வருடாந்த பொருட் கணிப்பீட்டினை நடாத்துவது பற்றிய கணக்காய்வு.

❖ அபிவிருத்தி மற்றும் உள்ளக நிருவாக நடவடிக்கைகள்.

➢ அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் வருடாந்த செயற்திட்டத்திற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது தாமதமடைய காரணமாகவுள்ள சிக்கல்களை கணக்காய்வு செய்வதும் அறிக்கையிடுவதும்

2015 ஆம் ஆண்டு தொடர்பாக முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழு முதலாவது காலாண்டுக்கு 2015.04.08 ஆம் திகதியும் இரண்டாம் காலாண்டுக்கு 2015.06.22 ஆம் திகதியும் மூன்றாம் காலாண்டுக்கு 2015.11.11 ஆம் திகதியும் நான்காம் காலாண்டுக்கு 2015.12.29 ஆம் திகதியும் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு வினாக்கள்

| | | |
|---|---|---|
| 01. | கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவில் கம்பஹா வனிதா சக்தி மன்றத்தின் நிதி நிலுவையை உறுதிப்படுத்திக்கொள்ளல். | 2015.01.08 |
| 02. | பியகம பிரதேச செயலாளர் பிரிவின் வனிதா சக்தி மன்றத்தை பரிசீலனை செய்தல் | 2015.05.07 |
| 03. | CEDAW மற்றும் BEIJING +20 சர்வதேச சமவாயங்கள் பற்றி அரச துறை அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் பற்றி பரிசீலித்தல் | 2015.05.21 |
| 04. | உள்ளகக் கணக்காய்வு பரிசோதனை – வங்கி இணக்கக் கூற்று – 2015 ஏப்ரல் | 2015.05.26 |
| 05. | உள்ளக கணக்காய்வு ஆரம்ப அறிக்கை 2015 | 2015.02.06 |
| 06. | வனிதா சக்தி சிறு நிதிக் கிளை முன்னேற்றம் | 2015.04.09 |
| 07. | வனிதா சக்தி சிறு நிதிக்கிளை முன்னேற்றம் | 2015.04.09 |
| 08. | பியகம பிரதேச செயலாளர் பிரிவின் வனிதா சக்தி மன்றங்களைப் பரிசீலித்தல் | 2015.05.05 |
| 09. | உள்ளக கணக்காய்வுப் பரிசீலனை – வங்கி இணக்கக் கூற்று 2015 ஏப்ரல் 00007040514 | 2015.05.26 |
| 10. | விதவை மற்றும் குடும்பத் தலைவிகளாகவுள்ள பெண்களை வலுவூட்டல் - 100 நாள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 2015.06.16 |
| 11. | களுத்துறை மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் சுழல் கடன் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி பரிசீலித்தல். | 2015.06.18 |
| 12. | எழுது கருவி கொள்வனவு மற்றும் களஞ்சியப்படுத்தல் பற்றி பரிசீலித்தல் | 2015.06.22 |

| | | |
|---|---|---|
| 13. | 700 மில்லியன் ரூபா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டு களுத்துறை மாவட்டத்தில் தாபிக்கப்பட்ட சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகள் மற்றும் அதற்கு அலுவலக உபகரணங்களை வழங்குவது சம்பந்தமாக வழங்கப்பட்ட பௌதீக பரிசோதனை அறிக்கை | 2015.06.25 |
| 14. | களுத்துறை மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் சுழல் கடன் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை பற்றிய பரிசீலனை | 2015.06.23 |
| 15. | பெண்களை அரசியலில் வலுவூட்டும் ஒரு நாள் டிப்ளோமா பாடநெறி 2014/2015 | 2015.07.28 |
| 16. | கொழும்பு மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் சுழல் கடன் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை பற்றி பரிசீலித்தல். | 2015.09.18 |
| 17. | உள்ளக கணக்காய்வுப் பரிசோதனை – வங்கி இணக்கக் கூற்று – 2015 செப்டம்பர் | 2015.10.12 |
| 18. | சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்களை துன்புறுத்துவதைத் தடுப்பதற்காக 2014 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூபா. 600 மில்லியன் ஏற்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்களை பின்னாய்வு செய்யும் செயன்முறை பற்றி பரிசீலித்தல். | 2015.10.21 |
| 19. | தேசிய மகளிர் குழுவினால் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் பற்றிய கணக்காய்வு வினாக்கள். | 2015.10.21 |
| 20. | CEDAW மற்றும் BEIJING +20 சர்வதேச சமவாயங்கள் பற்றி அரச துறை அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் பற்றி பரிசீலித்தல் | 2015.10.30 |
| 21. | இலங்கை மகளிர் பணியகத்தினால் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் சுழல் கடன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான 22 அறிவுரைகள். | 2015.11.02 |
| 22. | 2013 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட யுனிசேப் கருத்திட்டம் பற்றி பின்னாய்வு பரிசீலனை – மேல் மாகாணம் | 2015.11.06 |
| 23. | வாகன பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் பற்றிப் பரிசீலித்தல் 2015 | 2015.11.06 |
| 24. | உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை – வங்கி இணக்கக் கூற்று 00007040514 | 2015.11.06 |
| 25. | செத்சிறிபாய 2 ஆம் கட்டக் கட்டிடத்தில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சினைத் தாபித்தல். | 2015.11.17 |
| 26. | ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் | 2015.12.09 |
| 27. | 2015 செப்டம்பர் மாதம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களைப் பரிசீலித்தல் | 2015.12.14 |
| 28. | சில்லறைக் காசு கட்டுநிதியைப் பரிசீலித்தல் | 2015.12.14 |

# திட்டமிடல் பிரிவு

## பிரதான செயற்பணி

01. அமைச்சின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் திணைக்களங்களையும் ஒருங்கிணைப்புச் செய்து எதிர்காலத் திட்டங்களைத் தயார் செய்தல்.
02. அமைச்சின் சகல பிரிவுகள் மற்றும் திணைக்களங்களையும் ஒருங்கிணைப்புச் செய்து முன்னேற்ற அறிக்கைகளைத் தயார் செய்தல்.
03. திட்டமிடல் பிரிவுக்குரிய ஊடக நடவடிக்கைகளை ஊடகப் பிரிவுடன் இணைந்து மேற்கொள்ளல், தகைமைகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல்.
04. அரச சார்பற்ற அமைப்புகளுடன் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்வதும் முன்னேற்றத்தை அறிக்கையிடுவதும்.
05. அமைச்சு பிரதிநிதித்துவம் செய்துமுன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களாக நடாத்தப்படுகின்ற பல்வேறு நிகழ்வுகளை ஒழுங்கு செய்வதும் வெற்றிகரமாக அவற்றை நடாத்துவதும்.
06. பல்வேறு சமூக உபசரணைச் சேவைகளுக்குப் பங்களிப்பினைப் பெற்றுக்கொடுத்தல.
07. அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வழிநடாத்தல் மற்றும் பின்னாய்வு செய்தல் (தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிகழ்ச்சித்தட்டங்கள்)
08. திட்டமிடல் பிரிவு தொடர்பான அடிக்கடி விடய ரீதியான தகவல்களைச் சேகரிப்பதும் இற்றைப்படுத்துவதும்.
09. ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு முன்னேற்ற அறிக்கைகளையும் திட்டங்களையும் பெற்றுக்கொடுத்தல்.

## 2015 ஆம் ஆண்டின் செயற்பாடுகள்

01. தேசிய போஷாக்கு மாதத்தினை முன்னிட்டு (2015 ஜூன்) ‘‘ஆரோக்கியமான உணவின் மூலம் பலம் பெறுவோம் - ஊழியப் பலத்தினால் நாட்டினைக் கட்டியெழுப்புவோம்’’ எனும் தொனிப்பொருளின் கீழ் 2015.07.10 ஆம் திகதி அமைச்சு அலுவலர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தியமை.
02. உற்பத்தித் திறன் எண்ணக்கருவை அமுல்படுத்துவதன் கீழ் திட்டமிடல் பிரிவுக்குரிய பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களின் நியம நடவடிக்கை முறைகளைத் தயார் செய்தல்.

- ❖ பின்னாய்வு மற்றும் முன்னேற்றத்தை அறிக்கையிடல்.
- ❖ வருடாந்த செயற்திட்டத்தினைத் தயார் செய்தல்.
- ❖ கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை பற்றிய நிகழ்ச்சித்திட்டம்.
- ❖ அமைச்சின் இணையத்தளத்தை இற்றைப்படுத்திப் பேணிவரல்
- ❖ பால்நிலை சார் அடிப்படையிலான அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்.
- ❖ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பிடு செய்தல்.

ii.உற்பத்தித்திறன் எண்ணக்கருவின் கீழ் பசுமை உற்பத்தித்திறன் பற்றிய விடயங்களை உள்ளடக்கிய புத்தகத்தை தயார்செய்தல்.

03. நாளாந்தம் அச்சு ஊடகங்களில் பெண்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற வன்முறைகள் மற்றும் குற்றச் செயல்கள் பற்றி அறிக்கையிடுவது சம்பந்தமான பகுப்பாய்வு சார் ஆய்வினை மேற்கொள்ளல்.

04. 2015.06.29 ஆம் திகதி பதுள்ள மற்றும் மொணராகலை மாவட்டங்களிலுள்ள வெளிக்கள அலுவலர்களுக்கான அனர்த்த முகாமைத்துவம் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டமை.

05. 2015.10.09 ஆம் திகதி குருணாகல் மாவட்டத்திலுள்ள அமைச்சின் வெளிக்கள அலுவலர்களுக்கு அனர்த்த முகாமைத்துவம் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டமை.

"ஆரோக்கியமான உணவுகளின் மூலம் பலம் பெறுவோம் - ஊழியப் பலத்தின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்"அமைச்சு அலுவலர்களுக்கான போஷாக்கு நிகழ்ச்சித்திட்டம்




பெண்கள் மற்றும் சிறுவர்களை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட அனர்த்த முகாமைத்துவம் பற்றிய பயிற்சிநிகழ்ச்சித்திட்டம் - குருணாகல்.



# அபிவிருத்திப் பிரிவு

## பிரதான செயற்பணி

அமைச்சின் நோக்கை யதார்த்தமாக்கிக் கொள்ளும் அபிலாசையை அடைந்துகொள்வதற்காக அமைச்சின் சகல நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் ஐக்கிய நாடுகளின் அனுசரணை நிறுவனங்கள் உள்ளடங்கலாக ஏனைய அரச சார்பற்ற அமைப்புகளின் கருத்திட்டங்கள் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான கொள்கைகளைத் தயார் செய்தல், நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்து தேசிய மட்டத்திலான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

## அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னேற்றமும்

இந்த ஆண்டில் திரிய காந்தா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா. 85,000,000 வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதியில் நிதி சார் முன்னேற்றம் ரூபா. 83,438,444 ஆகும். அதற்கமைய 98 சதவீதமான நிதிசார் முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது.

### நிகழ்ச்சித்திட்டங்களுக்கமைய பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் (திரிய காந்தா நிகழ்ச்சித்திட்டம்)

- **விதவைகள் மற்றும் குடும்பத்தலைவிகளாகவுள்ள பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டல்.**

23.4 சதவீதமான விதவைகள் மற்றும் குடும்பத் தலைவிகளாகவுள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்ய எதிர்பார்ப்புடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. இதன் போது இளம் வயது விதவைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தி 2015 ஆம் ஆண்டில் ரூபா. 65.459 மில்லியன் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு,கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, அனுராதபும் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களிலுள்ள 98 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 2190 பேருக்கு சுயதொழில்வாய்ப்புக்கான உதவிகள் வழங்கப்பட்டன. மேலும் இந்தக் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தலைக் குறைத்தல் எனும் செலவுத் தலைப்பின் கீழ் செலவினங்கள் செய்யப்பட்டுள்ளன.

## ➢ பிரதேச செயலகங்களில் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகளைத் தாபித்தல்

சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்திக்கான பொறிமுறையினை அமுல்படுத்தத் தேவையான வசதிகளைச் செய்துகொடுக்கும் பொருட்டு இந்த அலகுகளை பிரதேச செயலகங்களில் தாபிக்கும் பணி 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.
சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக அரசாங்கம் அமுல்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டங்களை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் நல்லமுறையில் ஒருங்கிணைப்புச் செய்து பிரதேச செயலாளர்களின் நெருங்கிய கண்காணிப்பின் கீழ் பேணிவருவதற்காக பிரதேச செயலகங்களில் சிறுவர் மற்றும் பெண்கள் விடயம் தொடர்பிலான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வதன் மூலம் வினைத்திறனும் விளைதிறனும் மிக்க சேவையை ஏற்படுத்துவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. றம்புக்கண, வெலிவிட்டியதிவத்துற, அம்பலாங்கொட, மினுவாங்கொட, கொட்டப்பொல, பண்டாரகல, வெலிமட, கயிட்ஸ், காத்தாங்குடி, சம்மாந்துறை, நாவிதன்வெளி, கல்முனை தமிழ், மொணராக்கலை மாவட்ட செயலகம் ஆகிய அலுவலகங்களில் 13 அலகுகளுக்கு ரூபா. 5.2000 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது.

## ➢ பால்நிலை சார் அடிப்படையிலான விடயங்கள் தொடர்பில் பல்வேறு அமைச்சுக்களில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

அரசாங்க நிறுவனங்களில் பால்நிலைசார்அடிப்படை தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு மகளிர் மைய உதவி அலுவலர்களை ஒவ்வொரு அமைச்சுக்கும் இணைப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அலுவலர்களின் செயற்பணியாகவிருப்பது, அமைச்சுக்களில் சேவையாற்றுகின்ற அலுவலர்களுக்கு பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்படுகின்ற துஷ்பிரயோகங்கள், துன்புறுத்தல்கள் மற்றும் பால்நிலைசார் அடிப்படை தொடர்பில் கவனம் செலுத்துவதும் அதற்கான உணர்வுபூர்வமான தன்மையை ஏற்படுத்துவதற்கும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதுமாகும். இந்த ஆண்டில் 27 நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வாறு அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கென ரூபா 0.3146 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## ➢ ஊடகங்களினூடாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்

இலங்கை சனசமூகத்தில் பெண்களின் வகிபாகத்தை நல்ல முறையில் கட்டியெழுப்புவதற்காக முக்கிய அழுத்தத்தை ஏற்படுத்துவதற்கு ஊடகங்கள் பல்வேறு துறைகளிலும் தமது செயற்பணிகளை நிறைவேற்றி வருகின்றன. பால்நிலை சார் சமூக அந்தஸ்த்து, சம அந்தஸ்த்தை உறுதிப்படுத்துவதற்காக மற்றும் அரசியல் துறையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல், பெண்களுக்கு இடம்பெறுகின்ற பலதரப்பட்ட துன்புறுத்தல்கள், வன்முறை நடைமுறைகளை ஒழித்தல் மற்றும் சிறுவயதுச் சிறுமிகள் கர்ப்பமடைவதை ஒழிப்பதற்கான நிகழ்ச்சித்தட்டங்கள் மற்றும் குறுந்திரைப்படங்களைத் தயார்செய்தல் மற்றும் துண்டுப்பிரசுரங்களை வடிவமைத்தல் போன்றன இதன்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ➢ தகவல் தொழில்நுட்ப அலகு மற்றும் மகளிர் தரவுக் கட்டமைப்பு

மகளிர் தரவுக் கட்டமைப்பிற்குத் தேவையான தகவல்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தை பிரதேச மட்டத்தில் கணினி மயப்படுத்துவதற்காக பிரதேச செயலகங்களிலுள்ள வெளிக்கள அலுவலர்களுக்கு கணினி பற்றி முறையான பயிற்சியை அளித்தல் மற்றும் அதற்குரித்தான பணிகளுக்கென ரூபா. 1.0570 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. மேலும் அமைச்சினுள் கணினி வலையமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், இதற்கு சிறுவர் துஷ்பிரயோக மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு விடயத்தின் செலவுத் தலைப்பு மூலம் ரூபா. 8.421 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

### சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தலைத் தடுத்தல்

இந்த ஆண்டில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கெதிரான துன்புறுத்தலை தடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா. 150,000,000 ஆன தொகை ஏற்பாடு செய்யப்பட்டதுடன், ஆண்டின் இறுதியில் நிதிசார் முன்னேற்றம் ரூபா. 142,782,965 ஆகும். அதற்கமைய 95 சதவீதமான நிதிசார் முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது.

2014 ஆம் ஆண்டின் விசேட வரவுசெலவுத் திட்டப் பிரேரணைக்கமைய இலங்கையில் சிறுவர் துஷ்பியோகம் மற்றம் பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதற்கு வழங்கப்பட்ட ரூபா. 600 மில்லியன் ஏற்பாடுகளின் கீழ் எமது அமைச்சினால் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்தட்டங்களை தொடர்ந்தும் அமுல்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டில் ரூபா. 100 மில்லியன் ஏற்பாடுகள் வழக்கப்பட்டன.

## ➢ பெண்கள் அரவணைப்பு நிலையங்களை நிர்மாணித்தல்

யாழப்பாணம் மாவட்டத்தில் மருதங்கேணி, முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துறைப்பற்று, மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு, இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி செயலாளர் பிரிவின் முவகமவில் அமைந்துள்ள கொலின்ஸ் கிரசன்ட் அரசாங்க உத்தியோகபூர்வ வாசஸ்தலம் ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்பட்ட நிலையங்களுக்கான எஞ்சிய நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு ரூபா. 5.208 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## ➢ பொலிஸ் சிறுவர் மற்றம் மகளிர் பணியகங்களைத் தாபித்தல்

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தலைத் தடுப்பதற்காக பொலிசார் நிறைவேற்றுகின்ற செயற்பணியை வலுவூட்டும் பொருட்டு பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகங்கள் தாபிக்கப்பட்டன. பதவிய, கெபித்திகொல்லாவ, கல்கிரியாகம, அரலகம்வில, ஹிங்குராங்கொட, பிபில, சியம்பலாந்துவ, கந்தகெட்டிய, காத்தாங்குடி, வாழைச்சேனை, மகாஓயா, திருக்கோவில், பாணம, மூதூர், கந்தளாய்,

யாழ்ப்பாணம், கைட்ஸ், முல்லைத்தீவு, மல்லாவி, முருங்காவில், தலைமன்னார், மடு, பிங்கிரிய, கல்கமுவ, புத்தளம், கொத்மலை, சீத்தாவக்கபுர ஆகிய பொலிஸ் நிலையங்களில் இந்த அலகுகளைத் தாபிக்கும் பணிகளை நிறைவுசெய்தல் மற்றும் மேற்படி நிலையங்களுக்குத் தேவையான அலுவலக உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பது இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. இதற்கென ரூபா. 32.16 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

- **பிரதேச செயலகங்களில் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகளைத் தாபிப்பதும் அவற்றுக்கான உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதும்**

நெகரஹிர நுவரகம்பலாத்த, மகவை, கேகாலை, குருவிட்ட, பலாங்கொட, கொலன்ன, தெயத்தகண்டிய, மகாஓயா, ரிதிமாலியத்த, புத்தள, வத்தளை, சீத்தாவக்க, லங்காபுர ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்த அலகுகளைத் தாபித்தல் மற்றும் காலி, மாத்தறை, இரத்தினபுரி, மொணராகலை, ஹம்பாந்தோட்டை, அம்பாறை, புத்தளம், கொழும்பு, கேகாலை, பொலன்னறுவை, களுத்துறை, கம்பஹா, மாத்தளை, கண்டி, குருணாகல் ஆகிய மாவட்டங்களிலுள்ள 107 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதும் இந்த செலவுத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய ரூபா 23.123 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது.

- **விதவைகள் மற்றும் குடும்பத் தலைவிகளாகவுள்ள பெண்களை வலுவூட்டுவதற்கான தேசிய நிலையம்**

விதவைகள் மற்றும் குடும்பத் தலைவிகளாகவுள்ள பெண்களை வலுவூட்டல், அவர்கள் எதிர்நோக்குகின்ற சிக்கல்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இந்த அலுவலகம் கிளிநொச்சி மாவட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ளது. இதன் கட்டிடங்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகளுக்கென ரூபா. 0.8 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

- **ஆய்வு நடவடிக்கைகள்**

இணையத்தளக் குற்றச் செயல்கள் மற்றும் சிறுவயது தாய்மார்கள் பற்றிய இரண்டு ஆய்வுகள் நடாத்தப்பட்டதுடன், இதற்கென ரூபா. 2.217 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் கண்காணிப்புச் செய்வதானது இந்த செலவு விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதற்கென ரூபா. 2.938 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

# வெளிநாட்டுக் கருத்திட்டங்கள்

- ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் கீழ் பிரதேச செயலகங்களில் தாபிக்கப்பட்டுள்ள சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகளுக்கு கணினி உள்ளடங்கலாக அலுவலக உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல், 1938 எனும் மகளிர் உதவித் தொலைபேசிச் சேவையினை வலுவூட்டல் ஆகிய பணிகள் நிறைவேற்றப்பட்டன. இதற்கென ரூபா 4.560 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

- ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் கீழ் பெண்களை அரசியல் ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற செயற்படுகின்ற ஆலோசனை உதவி அலுவலர்களுக்கான டிப்ளோமா பாடநெறியை அமுல்படுத்தல், விவரணத் திரைப்படங்களைத் தயார் செய்தல், பெண்ணியல் சிகிச்சை முகாம்களை நடாத்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதற்கென ரூபா. 11.431 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.







*மகளிர் அரவணைப்பு நிலையம் - முல்லைத்தீவு*

*பொலிஸ் மற்றும் மகளிர் அரவணைப்பு நிலையம் - முளங்காவில்*







*விதவை மற்றும் குடும்பத்தலைவிகளான பெண்களை வலுவூட்டுவதற்கான தேசிய*

*சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி அலகுகள்.*







பகல்நேர பராமரிப்பு நிலையம்



# இலங்கை மகளிர் பணியகம்

## நோக்கு

இலங்கை சனசமூகத்திற்கு மதிநுட்பமுடைய, உணர்வுபூர்வமான, நம்பிக்கை மிக்க பெண்கள் சமுதாயத்தை உருவாக்கும் தேசிய நிறுவனமாக மாறுதல்

## செயற்பணி

தமது அறிவையும் பலத்தையும் உச்சளவிலும் நல்லமுறையிலும் பயன்படுத்தி சுய பலத்தின் மூலம் சவால்களை எதிர்கொள்கின்ற இலங்கைப் பெண்கள் சமுதாயத்திற்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கு முறையான ஒழுங்கமைப்புச் சட்டகத்தினூடாக திட்டமிடப்பட்ட அறிவு பெற்றுக்கொடுத்து மேற்கொள்ளப்படுகின்ற சமூக, பொருளாதார வலுவூட்டல்களினூடாக அரசாங்கக் கொள்கைகளுக்கமைய பெண்களின் அபிவிருத்திக்காகச் செயற்படுகின்ற தேசிய பொறிமுறையாக மாற்றமடைதல்.

## நோக்கங்கள்

- பொருளாதார, சமூக, கல்வி, அரசியல் மற்றும் கலாசாரம் போன்ற துறைளில் இலங்கைப் பெண்களுக்கு சமமான உரிமையினை அனுபவிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- பெண்களாகவுள்ளதன் காரணமாக பல்வேறு துறைகளில் தற்போது எதிர்நோக்க வேண்டியேற்பட்டுள்ள தடைகளை நீக்குவதற்கு அவர்களை வலவூட்டல்.
- பெண்களுக்கு சமவுரிமைகள் மற்றும் சம வாய்ப்புக்களை உறுதிப்படுத்த வேண்டிய துறையினை இனங்காணல், அதற்குத் தேவையான அரசாங்கக் கொள்கைகளைத் தயார் செய்வதற்கு உதவுதல், மற்றும் அதற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

## பிரதான பணிகள்

- இலங்கைப் பெண்களை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் வலுவூட்டுவதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை இனங்காணல், திட்டமிடல், அமுல்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்
- சகல வயதுப் பிரிவுகளையும் சேர்ந்த பெண்களின் விசேட அம்சங்களை இனங்கண்டு அவர்களுக்கு உகந்தவாறு நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தியின் பங்காளர்களாக மாற்றுவதற்குரிய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பெண்களாகவிருப்பதனால் அவர்கள் எதிர்நோக்குகின்ற சமூக அசௌகரியங்களை தவிர்ப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- சமூகத்தில் விசேட காரணங்களினால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ள பெண்களுக்கான விசேட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- ஒட்டுமொத்தப் பெண்கள் சமுதாயத்தினதும் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்குகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பெண்களுக்கு ஒரே அமைப்பின் கீழ் செயற்படுவதற்காக சமுதாய அடிப்படையிலான மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை பெண்களை ஒரே வலையமைப்பின் கீழ் ஒழுங்குபடுத்தல்.

## நிகழ்ச்சித்திட்ட ஒழுங்கமைப்பு

### பொருளாதார ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்

- விதவைகள் மற்றும் வீட்டுக்குத் தலைமை தாங்கும் பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டல்
- கால்நடை வள நிகழ்ச்சித்திட்டம்
- வருமான உருவாக்க வழிமுறைகளுக்கு ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்
- திறன்சார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- பெண்களின் உற்பத்திகளின் கண்காட்சி மற்றும் சந்தை
- சுழல் கடன் நிகழ்ச்சித்திட்டம்
- வனிதா சக்தி மன்றம்
- வெளிநாடு செல்ல உத்தேசித்துள்ள பெண்களை நாட்டிலேயே பொருளாதார ரீதியாக வலுவூட்டல்
- திரிய தயத்தெட்ட சவிய மீனவப் பெண்களை வலுவூட்டல்.

### சமூக ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்

- பெண்கள் அரவணைப்பு நிலையங்களைப் பேணிவரல்.
- ஆலோசனை நிலையங்களைப் பேணிவரல் மற்றும் சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பால்நிலைசார் அடிப்படையிலான துன்புறுத்தலை ஒழிப்பதற்கு சமுதாயத்தை விழிப்புணர்வூட்டல்.
- ஆரோக்கியமான வாழ்க்கைக்கு போஷாக்கு எனும் போஷனை நிகழ்ச்சித்திட்டம்.
- தோட்டப்புறப் பெண்களுக்கான நிதி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்
- கட்டிளம் பருவ யுவதிகளுக்கான வாழ்க்கைத் திறன், இனப்பெருக்கச் சுகாதார நிகழ்ச்சித்திட்டம்
- மகளிர் அமைப்புக்களின் வலையமைப்பினை வலுவூட்டல்.
- சிறைச்சாலைகளிலுள்ள பெண்களை சமூக ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்
- சர்வதேச மகளிர் தினம் மற்றும் சிறுமியர் தினத்தை முன்னிட்டுஅமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டம்

### வேறு நிகழ்ச்சித்திட்டங்க

- மாவட்ட முன்னேற்ற மீளாய்வும் பின்னாய்வு நடவடிக்கைகளும்
- அலுவலரின் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
- ஊடகம் மற்றும் பிரச்சாரம், நூலகங்களை பேணிவருதல்

## அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னேற்றமும்

இந்த ஆண்டில் காந்தா சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா. 40,000,000 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டதுன், ஆண்டின் இறுதியில் நிதி சார் முன்னேற்றம் ரூபா. 38,373,078 ஆகும். அதற்கமைய 95 சதவீதமான நிதிசார் முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது.

## பொருளாதார ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்

### ➢ விதவை மற்றும் வீட்டுத் தலைவியாகவுள்ள பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டல்

யுத்தம் காரணமாக விதவையான, தொழிலற்றுள்ள பெண்கள் மற்றும் வேறு காரணங்களினால் விதவையான மற்றும் வீட்டுக்குத் தலைமை தாங்கும் பெண்களை பொருளாதார ரீதியாக வலவூட்டுவது, அவர்களின் சமூக நிலைமைகளைக் கட்டியெழுப்பக் கூடியவகையில் இந்த நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் கீழ் 2015 ஆம் ஆண்டில் 110 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகள் 331 பேருக்கு சுயதொழில்வாய்ப்புக்கான உதவிகள் வழங்கப்பட்டதுடன், இதற்கென ரூபா. 10.097 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

### ➢ கால்நடை வள நிகழ்ச்சித்திட்டம்

பசுப்பால் பயன்பாட்டின் மூலம் குடும்ப போஷனை, கழிவுப் பொருட்களிலிருந்து சேதனப் பசளை உற்பத்தி செய்தல், மற்றும் வீட்டுப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஊக்குவித்தல், உயிர் வாயு உற்பத்தி, உப வருமான வழிமுறைகளின் மூலம் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் மற்றும் உள்நாட்டு பசுப்பால் தேவையில் 55 சதவீதம் வரை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்துகொள்ளல் மற்றும் ஒரு கிளாஸ் பால் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் போன்றன சாதகமான பங்களிப்பினை ஏற்படுத்துவதற்கு இந்த நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டதுடன்,மகளிர் அமைப்புக்களின் அங்கத்தவர்களுக்காக இது அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன்போது பிரதானமாக பயனாளிகளுக்கு கால்நடை வளர்ப்பு பற்றி பயிற்சி வழங்கப்படுவதுடன், பயிற்சியின் பின்னர் பசுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு சுழல் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற கடனை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

### ➢ வருமான உருவாக்க வழிகளுக்கு ஊக்குவிக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (தொழில்சார் அபிவிருத்திப் பயிற்சி)

வியாபாரமொன்றை ஆரம்பிக்கவும் பேணிவருவதற்கும் தேவையான முகாமைத்துவ, தொழில் முயற்சி சார்ந்த மற்றும் கணக்கு நடவடிக்கைகள் பற்றிய அறிவினைப் பெற்றுக்கொடுத்தல்,வியாபாரங்களில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதே இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் போது தேசிய அருங்கலைகள் பேரவை, லக்சல, கைப்பணிக் கைத்தொழில், கைப்பணி உருவாக்கம்,கமத்தொழில் திணைக்களம், விதாதா பயிற்சி நிலையம், பிடவைக் கைத்தொழில் அமைச்சு ஆகிய நிறுவனங்களின் பிரபல

பயிற்றுவிப்பாளர்கள் பயிற்சிகளை வழங்குவதுடன், உற்பத்திக்கான மூலப்பொருள் வசதிகளைச் செய்துகொடுத்தல் மற்றும் விற்பனைக்கான சந்தை வாய்ப்புகளை அறிமுகம் செய்யக்கூடிய வகையில் இந்த நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டில் வருமான உருவாக்க வழிமுறைகளை ஊக்குவிக்கும் 72 நிகழ்ச்சித்திட்டங்கள் 3495 பயனாளிகளுக்காக 20 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 200 பயனாளிகளுக்காவும் சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காகவும் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதற்காக ரூபா. 4.003 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## ➢ சுழல் கடன் நிகழ்ச்சித்திட்டம்

முதலீட்டுக்கான ஈடுபாட்டின் அளவை மேம்படுத்துவதற்கு பெண்கள் அமைப்புக்களில் பதிவுசெய்துள்ள அங்கத்தவர்களுக்கு இந்தக் கடன் திட்டம் அமுல்படுத்தப்ட்டது. 2015 ஆம் ஆண்டில் ரூபா 0.283 மில்லியன் இதற்காக செலவிடப்பட்டது.

## ➢ வனிதா சக்தி வங்கி அமைப்பு

பெண்கள் அமைப்புக்களின் அங்கத்தவர்களை சேமிக்கத் தூண்டுவதற்காக தாபிக்கப்பட்டுள்ள வனிதா சக்தி வங்கி அமைப்புகளின் பதவியணியினரைப் பயிற்றுவித்தல், கண்காணிப்புச் செய்வது இந்த ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டது. ஒரு பயிற்சிச் செயலமர்வும் 18 வங்கிகளைக் கண்காணிப்புச் செய்வதும் மேற்கொள்ளப்பட்டதுடன், இதற்காக ரூபா 0.193 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## ➢ வெளிநாடு செல்ல எதிர்பார்த்துள்ள பெண்களை இந்நாட்டிலேயே பொருளாதார ரீதியாக வலுவூட்டல்

வெளிநாடு செல்ல உத்தேசித்துள்ள பெண்கள் வெளிநாடு செல்வதனால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் மற்றும் வெளிநாடு செல்வதற்குப் பதிலாக உள்நாட்டிலேயே தொழில்வாய்ப்புகளை அறிமுகம் செய்தல் மற்றும் அதற்காக பெண்களை ஊக்குவிப்பதற்கு இதன்கீழ் பல நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. 2015 ஆம் ஆண்டில் ரூபா. 2.980 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன், 14 நிகழ்ச்சித்திட்டங்கள் 1511 பயனாளிகளுக்காக நடாத்தப்பட்டுள்ளன.

## ➢ "திரிய தயத்தெட்ட சவிய" மீனவப் பெண்களை வலுவூட்டல்

மீனவ சமுதாயத்திலுள்ள பெண்கள் அமைப்புக்களின் அங்கத்தவர்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்கு திரிய தயத்தெட்ட சவிய எனும் மீனவப் பெண்களுக்கான நிகழ்ச்சித்திட்டம் 8 பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டது. இதன்போது மீன்பிடித்துறைக்குத் தேவையான உபகரணங்கள் உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்வது நோக்கமாகுமென்பதுடன்,ரூபா 0.9360 மில்லியன் இதற்கெனச் செலவிடப்பட்டுள்ளது.

## சமூக ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கைப் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுக்கத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பது இதன் கீழ் இடம்பெறுகின்றது. இதற்கமைய,

### 01.அரவணைப்பு நிலையங்கள்

சட்ட விரோத ஆட்கடத்தலுக்கு ஆழான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாதிகக்ப்பட்ட பெண்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகள் தொடர்பான சிக்கல்களை தீர்த்துவைக்கும் வரை பாதுகாப்பாக தங்கவைத்திருப்பதற்கும் அவர்களுக்கு அரவணைப்பைச் செய்துகொடுப்பதற்கும், ஆலோசனை, சட்ட நடவடிக்கைகளுக்கு வசதிகளைச் செய்துகொடுப்பதற்கும், சுகாதார வசதிகள் மற்றும் அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் (உணவு, உடை) இந்த நிலையத்தின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அரவணைப்பு நிலையங்கள் இரண்டினைப் பேணிவருவதற்காக ரூபா 1.410 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது,

### 02.ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆலோசனை நிலையங்கள்

பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு உளவியல் ஆலோசனைகளை வழங்கி அவர்களுக்கு சேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஆற்றல் மற்றும் நிறுவனங்களிடம் அவர்களை அனுப்பிவைப்பதும் வாழ்க்கையில் எழுகின்ற சிக்கல்களை தீர்த்துவைக்கும் போது உளவியல் முறைகளைப் பயன்படுத்தப் பழக்கப்படுத்துவதற்காகவும் 12 ஆலோசனை நிலையங்கள் ஆலோசனை அலுவலர்களின் கீழ் பேணி வரப்படுவதுடன், அதற்கு மேலதிகமாக பிரதேச செயலகங்களுக்கு ஆலோசனை உதவி அலுவலர்களும் இணைப்புச்செய்யப்பட்டுள்ளனர். அதனூடாக சமூக சிக்கல்களுக்குத் தீர்வுகள் மற்றும் சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டில் 18,149 பேருக்கு உளவியல் ஆலோசனை வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், அலுவலர்களைப் பயிற்றுவிக்கும் நான்கு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இவற்றுக்கென ரூபா. 5.099 மில்லியன் செலவிடப்பட்டது.

## 03.பால்நிலை சார் அடிப்படையிலான வன்முறை மற்றும் ஆட்கடத்தலைத் தடுக்கும் நிகழ்ச்சித்திட்டம்

பெண்கள் பற்றிய தேசிய மற்றும் சர்வதேசகொள்கைகள் மற்றும் சமவாயங்கள் சம்பந்தமாகவும் பெண்களின் உரிமைகள் மற்றும் பால்நிலைசார் அடிப்படையில் இடம்பெறுகின்ற வன்முறைச் சந்தர்ப்பங்களை இனங்காண்பதற்கும் அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கும் தேவையான சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகள் பற்றி விழிப்புணர்வூட்டுவது, ஆட்கடத்தல், ஆட்கடத்தலுக்கு ஆழாகும் சந்தர்ப்பங்களை இனங்காணல், பாலியல் சுரண்டல் போன்றன பற்றி பெண்களை விழிப்புணர்வூட்ட இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. 400 பயனாளிகளுக்காக 40 நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த ஆண்டில் நடாத்தப்பட்டதுடன், அதற்கென ரூபா. 0.982மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## 04.ஆரோக்கியமான வாழ்க்கைக்கு போஷனை நிகழ்ச்சித்திட்டம்

எதிர்காலத்தில் சுகாதார ரீதியில் ஆரோக்கியமான சமூகமொன்றுக்காக சுகாதாரம், போஷனை துப்பரவேற்பாடு தொடர்பான அறிவு பெண்களுக்கு அத்தியவசியமாகும். இதன் மூலம் ஆரோக்கியமான சமூகமொன்றை தேசத்தின் அபிவிருத்திக்கு பங்களிக்கச் செய்ய வாய்ப்பு ஏற்படுவதுடன், இரசாயணப் பொருட்களைப்பயன்படுத்தாது உணவை உற்பத்தி செய்வதற்கும் ஊக்குவிக்கப்படுகின்றனர். 51 நிகழ்ச்சித்திட்டங்கள் 5619 பயனாளிகளுக்காக நடாத்தப்பட்டதுடன், இதற்காக ரூபா. 1.939 மில்லியன் செலவிடப்பட்டது.

## 05.தோட்டப்புற பெண்களுக்கான நிதி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

சமூக, பொருளாதார, கலாசார ரீதியில் தோட்டப்புறப் பெண்களின் அந்தஸ்த்தை மேம்படுத்துவதற்காக கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தி போஷாக்கை மேம்படுத்துவது, போதைவஸ்த்து ஒழிப்பு, வெளிநாடு செல்ல எதிர்பார்த்துள்ள தோட்டப்புற பெண்களுக்கு மாற்று வருமான வழிமுறைகளுக்கு ஊக்குவித்தல், கல்வி, ஆட்கடத்தல், துன்புறுத்தலைக் குறைப்பதற்காகவும் தோட்டப்புறச் சமுதாயம் வாழும் பிரதேச செயலாளர் பிரிவுகள் 51 இலுள்ள பயனாளிகள் 5467 பேருக்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதற்கென ரூபா. 2.015 மில்லியன் செலவிடப்பட்டது.

## 06.கட்டிளம் பருவ யுவதிகளின் வாழ்க்கைத்திறன் மற்றும் இனப்பெருக்கச் சுகாதார நிகழ்ச்சித்திட்டம்

கட்டிளம் பருவ யுவதிகளின்திறன்கள் மற்றும் அறிவை மேம்படுத்துவதற்கு பிரதேச செயலாளர் பிரிவுகள் 50 இலுள்ள 7293 யுவதிகளை சம்பந்தப்படுத்திக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. இதற்கென ரூபா. 1.987 மில்லியன் செலவிடப்பட்டது.

## 07.பெண்கள் அமைப்புக்களின் வலையமைப்பை வலுவூட்டல்

பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், அவர்களின் அபிவிருத்திக்கான குழவாக செயற்படுவதற்கு வலையமைப்பொன்றை உருவாக்குதல், மற்றும் அவர்களின் தலைமைத்துவப் பயிற்சிக்காகத் தாபிக்கப்பட்டுள்ள கிராமிய மட்டத்திலான பெண்கள் அமைப்புகள், பிரதேச பெண்கள் சபைகள் மற்றும் மாவட்ட பெண்கள் சபைகளை வலுவூட்டுவது, உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளடங்கலாக சேவைகளைப் பெற்றுக்கொடுப்பது இதன் நோக்கமாகும். இதற்காக ரூபா. 2.061 மில்லியன் செலவிடப்பட்டது.

## 08.சிறைச்சாலைகளிலுள்ள பெண்களை சமூக ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

சிறிய தவறுகளின் காரணமாக சிறைச்சாலையிலுள்ள பெண்கள் மீண்டும் மீண்டும் அதே தவறுகளில் ஈடுபடுவதைத் தடுத்து நல்ல முறையில் சமூக மயப்படுத்துவதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் சிறைச்சாலைகளில் அமுல்படுத்தப்பட்டது. இதன்போது தையல் பயிற்சிப் பாடநெறி மற்றும் கைப்பணி உற்பத்திகள் பற்றிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. 324 பயனாளிகளுக்காக 7 நிகழ்ச்சித்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டது. இதற்கென ரூபா. 0.485 மில்லியன் செலவிடப்பட்டது.

## 09.வேறு நிகழ்ச்சித்திட்டங்கள்

மாவட்ட முன்னேற்ற மீளாய்வு மற்றும் பின்னாய்வு நடவடிக்கைகள், அலுவலர்களின் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், ஊடகம் மற்றும் பிரச்சாரம், நூலகர்களைப் பேணிவரல் ஆகிய பணிகள் மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், இதற்கென 2015 ஆம் ஆண்டில் ரூபா. 3.063 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

*பொருளாதார ரீதியாக வலுவூட்டல் - விதவைகள் வீட்டுக்குத் தலைமை தாங்கும் பெண்கள்*





வருமான உருவாக்க நிகழ்ச்சித்திட்டங்கள்





*சமுதாயத்தை விழிப்புணர்வூட்டல்*







## தேசிய மகளிர் குழு

**நோக்கம்**

பால்நிலை சார் சம அந்தஸ்த்து உறுதி செய்யப்பட்டதும், வன்முறையற்றதுமான பெண்களுக்கு உகந்த இலங்கைச் சமூகம்.

**செயற்பணி**

இலங்கைப் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்தல், சம அந்தஸ்த்தை உறுதி செய்தல் மற்றும் பூரண அபிவிருத்திக்கு வழிவகுக்கின்ற கொள்கைகள், சட்டக் கட்டமைப்பினைத் தயார்செய்வதற்கான சிபாரிசுகள் மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதும் முறையாக அமுல்படுத்த ஊக்குவிப்பதும் காண்காணிப்புச் செய்து மதிப்பீடு செய்வதுமாகும்.

**பிரதான பணிகள்**

- பால்நிலை சார் அடிப்படையில் ஏற்படுகின்ற மாற்றங்கள், வித்தியாசங்கள் பற்றிய முறைப்பாடுகளைப் பொறுப்பேற்றல், அவதானித்தல், மற்றும் அது சம்பந்தமாக நிறுவாக அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அல்லது சபைகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவற்றைச் சமர்ப்பித்தல்.
- பெண்களின் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீறுவது தொடர்பாக கிடைக்கின்ற முறைப்பாடுகள், நிவாரணங்கள், சட்ட உதவிகள் அல்லது மத்தியஸ்தம் செய்கின்ற சேவைகளுக்கு அரசாங்க அல்லது அரச சார்பற்ற அமைப்புகளிடம் சமர்ப்பித்தல்.
- மேற்படி செயற்பாடுகளை ஆய்வுசெய்தல், குறித்த நிருவாக அதிகாரிகளிடமிருந்து வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் மேற்படி அறிக்கைகளை நாட்டினுள் பிரபல்யப்படுத்தல் போன்றவற்றுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- சமவாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவாறு பெண்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் விடயத்தில் சட்ட ரீதியான மற்றும் அபிவிருத்திக் கொள்கைகளினால் ஏற்படுகின்ற அழுத்தங்கள், தாக்கங்களை மதிப்பீடு செய்தல்.
- சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதன் மூலம் சமவாயத்தின் நோக்கங்களை நிறைவுசெய்துகொள்ள உதவுவதும் மேற்படி ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு மீளத்திருத்தியமைப்பதற்கான சிபாரிசுகளைச் சமர்ப்பித்தலும்.
- பெண்களின் அந்தஸ்த்து தொடர்பாக விடயப் பொறுப்பு அமைச்சரினால் குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் அல்லது பொருத்தமானதென குழு சிந்திக்கக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அறிவுரை வழங்குதல்.

## அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னேற்றமும்

### ➢ ஊக்குவித்தல், விழிப்புணர்வூட்டல், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

சீடோ சமவாயம் பற்றி 150 அரசாங்க அலுவலர்களை விழிப்புணர்வூட்டல். இதற்காக 9 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதோடு,ரூபா. 1.1273 மில்லியன் செலவிடப்பட்டது.

பெண்களுக்கு இடம்பெறுகின்ற துன்புறுத்தல்கள் தொடர்பில் உணர்வுபூர்வமாக்குவதற்கு பொலிஸ் அலுவலர்களை விழிப்புணர்வூட்டல். இதன் போது 238 பொலிஸ் அலுவலர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டனர். இதற்காக இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்ட. ரூபா. 0.1869 மில்லிய்ன இதற்கென செலவிடப்பட்டது.

சேவை நிலையங்களில் இடம்பெறுகின்ற துன்புறுத்தல்களை தடுப்பதற்காக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன், இந்த ஆண்டில் கட்டுநாயக்க, அவிசாவளை,ஹொரணை பிரதேசங்களில் அமைந்துள்ள சுதந்திர வர்த்தக வலையங்களைச் சேர்ந்த பெண்களுக்காக நான்கு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இதற்கென ரூபா. 0.1062 மில்லியன் செலவிடப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை சிறுவர், தாய்மார் எதிர்நோக்குகின்ற சுகாதாரமற்ற சமூக விளைவுகள் பற்றி விழிப்புணர்வூட்டும் நோக்கத்துடன் சிறு வயதில் கர்ப்பமடைவதை ஒழிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. இதன் கீழ் ஐந்து நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன், அதற்காக ரூபா. 0.4248 மில்லியன் செலவிடப்பட்டது.

பெண்களுக்கு இடம்பெறுகின்ற சகல வகையிலுமான துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகளின் 16 நாள் நிகழ்ச்சித்திட்டத்தை முன்னிட்டு பல நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இதற்காக ரூபா. 1.51 மில்லியன் செலவிடப்பட்டது.

பெண்களுக்கெதிரான துன்புறுத்தலைத் தடுப்பது பற்றி மாவட்ட மற்றும் பிரதேச அமைப்புக்களிலுள்ள பெண்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விலச்சியவில் ஒரு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது, இதற்கென ரூபா. 0.065 மில்லியன் செலுத்தப்பட்டது.

அரசியல் துறைக்கு பெண்களை வலுவூட்டுவதற்கான டிப்ளோமா பாடநெறி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நடாத்தப்பட்டது. இதில் 28 மாணவிகள் கலந்துகொண்டதுடன், இதற்கென ரூபா 1.48 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

### ➢ ஆராய்ச்சி

தோட்டத்துறைப் பெண்களுக்கு இடம்பெறுகின்ற துன்புறுத்தல்கள் பற்றிய ஆராய்ச்சியொன்று இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்காக ரூபா. 0.728 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## ➢ சபைக் கலந்துரையாடல்கள்

முறைசாராத் துறையிலுள்ள பெண்களின் சம்பளங்களைச் சட்டமயமாக்கல், சமூக தொடர்புசாதன வலையமைப்பு பெண்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் முறை, விவாகமாக விருப்பம் பெற்றுக்கொடுக்கும் வயது 16 எனும் எண்ணக்கரு ஆகிய தொனிப்பொருட்களின் கீழ் அரசாங்க மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களைச் சோந்த 50 கல்விமான்களைக் கொண்ட குழுவின் பங்கேற்புடன் இந்தக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. இதற்காக ரூபா. 0.2954 மில்லியன் செலவிடப்பட்டது.

## ➢ ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஊடக வெளியீடுகளை விருத்திசெய்தல்


பெண்களின் தற்போதைய சிக்கல்கள் பற்றிய 8 வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்புச் செய்யப்பட்டன. “பிரக்கதிய ஹவுல்கருவோ” எனும் வருடாந்த சஞ்சிகை,“வனிதா விஹவ” எனும் காலாண்டு சஞ்சிகை அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது. சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சத்துட்டுப் பவுள எனும் திரைப்படத்தைக் காட்சிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஊடக நகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இதற்கென ரூபா. 0.848 மில்லியன் செலவிடப்பட்டது.

பால்நிலை சார் அடிப்படையிலான துன்புறுத்தலைத் தடுத்தல், சிறு வயதில் கர்ப்பமடைவதை ஒழித்தல்,பெண்களுக்கான உதவித் தொலைபேசிச் சேவை 1938 ஐ மற்றும் சேவை இடங்களில் இடம்பெறுகின்ற பாலியல் துன்புறுத்தல்களை ஒழிப்பதற்கான சுவரொட்டிகள், ஸ்டிகர்களை அச்சிடல் மற்றும் குறும் விபரத்திரைப்படத்தைத் தயாரித்தல் போன்ற அபிவிருத்திப் பணிகளுக்காக ரூபா. 1.026 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

பால்நிலை சார் அடிப்படையிலான துன்புறுத்தலை ஒழித்தல் மற்றும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களின் பெறுபேறுகள் மற்றும் மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களில் அபிவிருத்தி செய்ய வேண்டிய அம்சங்கள் பற்றி ஆராய்வதற்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஒத்துழைப்புடன் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக ரூபா. 0.3555 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## ➢ 1938 மகளிர் உதவித் தொலைபேசிச் சேவை

இந்த சேவையை வலுவூட்டுவதற்காக 2015 ஆம் ஆண்டில் ரூபா. 0.22 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.



*சீடோ சமவாயம் பற்றி விழிப்புணர்வூட்டல்*



*வானொலி நிகழ்ச்சி*



*பொலிஸ் அலுவலர்களை விழிப்புணர்வூட்டல்*



*சபைக்கலந்துரையாடல்*



*சேவை நிலையங்களில் துன்புறுத்தல்களைத் தடுப்பதற்காக விழிப்புணர்வூட்டல்*







# சிறுவர் செயலகம்

**நோக்கம்**

**உடல், உளவியல், சமூக மற்றும் இனப்பெருக்க அபிவிருத்தியைக் கொண்ட இலங்கை முன்பள்ளிப் பருவ சமூகத்தை உருவாக்கல்.**

செயற்பணி

தேசிய மட்டத்திலான கேந்திர நிறுவனம் என்றவகையில் கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தல், அமுல்படுத்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் பின்னாய்வின் மூலம் இலங்கையில் முன்பள்ளிச் சிறுவர்களின் ஒட்டுமொத்த அபிவிருத்தியை உறுதிசெய்தல்.

பிரதான செயற்பணிகள்

- முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய கொள்கையைத் தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்தும் பொறிமுறையாகச் செயற்படல்.
- அரச, அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் தனியார்த் துறையின் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்வதும் வலையமைப்புச் செய்வதும்.
- முன்பள்ளிப் பருவ உபசரணை, அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், தரவுகளைச் சேகரித்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்தல்.
- முன்பள்ளிப் பருவ சிறுவர்களின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்கு ஏற்புடையதாகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை தயார் செய்து அமுல்படுத்தல்.
- முன்பள்ளிப் பருவத்தின் முக்கியத்துவம் பற்றி மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் அவர்கள் மத்தியில் அது பற்றிய உணர்வுபூர்வமான தன்மையை ஏற்படுத்தல்.

## அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னேற்றமும்

### விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

- **பாலர் பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஒரு கிளாஸ் பசுப்பால் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்**

போஷனைக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளது போஷாக்கு நிலைமையை மேம்படுத்துவதையும் உள்நாட்டுப் பால் உற்பத்தியாளர்களை வலுவூட்டுவதனையும் நோக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. 6014 பாலர் பாடசாலைகளைச் சேர்ந்த 130,000 பிள்ளைகளுக்காக ரூபா. 188.820 மில்லியன் தொகை 2015 ஆம் ஆண்டு இதன் கீழ் செலவிடப்பட்டுள்ளது.

- **கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூபா 20,000/-ஆன போஷாக்குக் கொடுப்பனவைப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம்**

தற்போதைய அரசாங்கத்தின் 100 நாள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த நிறையுடைய பிள்ளைகள் பிறப்பதை இலங்கையில் குறைக்கும் நோக்கத்துடன் பிள்ளைகளைப் பிரசவிக்கின்ற ஒவ்வொரு தாய்க்கும் ரூபா 20,000.00 தொகையான போஷாக்குக் கொடுப்பனவினைப் பெற்றுக்கொடுப்பதற்காக அமுல்படுத்தப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மாதமொன்றுக்கு ரூபா. 2,000/- என்ற வீதம் 10 மாதங்களில் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவதுடன், கர்ப்ப காலத்தில் தாய்க்குத் தேவையான போஷாக்குப் பதார்த்தங்கள் உள்ளடங்கிய உணவுப் பொருட்களைக் கொண்ட போஷாக்குப் பொதியாக சுகாதார மருத்துவ அலுவலகத்தில் பதிவுசெய்கின்ற ஒவ்வொரு கர்ப்பிணித் தாய்க்கும் இந்தக் கொடுப்பனவு உரித்தாகின்றது.

- **மூமா திரிய எனும் பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்க ரூபா. 250/- ஐ வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்**

பாலர் பாடசாலை/ முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையச் சேவைகளை மென்மேலும் பலப்படுத்தி மேம்படுத்தும் நோக்கத்துடன் 2015 இடைக்கால வரவுசெலவுத் திட்டப் பிரேரணையின் கீழ் பாலர் பாடசாலை/முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் ஆசிரியைகளுக்கு மாதாந்தம் ரூபா 250/- ஆன கொடுப்பனவு 2015 ஜுன் மாதம் முதல் செலுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், இது சிறுவர் செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்டது. அதற்கமைய தகைமை பெற்ற பாலர் பாடசாலை ஆசிரியைகள் 7975 பேருக்கு ரூபா. 9.964 மில்லியன் செலவிடப்பட்டு 7 தவணைகளில் இந்த தொகை வழங்கப்பட்டது.





## ழமா சவிய நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் ரூபா 15 மில்லியன்களாகும். உலக சிறுவர் தின நிகழ்ச்சித்திட்டங்கள், மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக்களைத் தாபித்தல் மற்றும் முன்பள்ளிப் பருவப் பிள்ளைகளுக்கான அழகியற்கலை நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் போன்றன இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டன.

I. 2015 ஆம் ஆண்டில் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த ஏற்பாடுகளின் அளவு ரூபா. 0.5 மில்லியன் ஆகும். ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டுத் தொகையில் ரூபா. 393,850.00 ஆன ஏற்பாடுகள் மாவட்டச் செயலார்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய 2015.12.31 ஆம் திகதிக்கு ரூபா. 0.229 மில்லியன் ஆன நிதிசார் முன்னேற்றம் மற்றும் பௌதீக முன்னேற்றமாக 36 குழுக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

II. உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டம் யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் நடத்தப்பட்டதுடன், இதற்கென ரூபா. 6.280 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உலக சிறுவர் தின தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா. 8.527 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. பிரதேச செயலக மட்டத்தில் பல்வேறு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாலர் பாடசாலை பிள்ளைகளுக்கான இரசனை நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றை அமுல்படுத்துவதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் ரூபா. 12,500.00 வீதம்,322 பிரதேச செயலகங்களுக்கும் ரூபா. 4.02 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையிடப்பட்டுள்ள தகவல்களுக்கமைய 305 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருப்பதுடன், அவற்றுக்கென ரூபா. 3.801 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் முழுவதிலும் அமுல்படுதப்பட்டன.

III. 2015 ஆம் ஆண்டில் முன்பள்ளிப் பருவ பிள்ளைகளுக்கு 271 அழகியற்கலை நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ரூபா. 15,000.00 வீதம் ரூபா. 4.06 மில்லியன் ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை அவற்றில் 271 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருப்பதுடன், அதற்கெனச் செலவிடப்பட்டுள்ள தொகை ரூபா. 4.06 மில்லியன் ஆகும்.

*சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள்*



*அழகியற்கலை நிகழ்ச்சித்திட்டங்கள்*



## முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய நிகழ்ச்சித்திட்டம்

இதன் கீழ் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 40 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், பின்வருமாறு அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

## I.“செனஹெதடாக” எனும் வீடுகளை அடிப்படையாகக் கொண்ட முன்பள்ளி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் வீடுகளை மையமாகக் கொண்டு சூழல் மற்றும் வீட்டில் அன்றாடம் இடம்பெறுகின்ற பணிகளின் போது முன்பள்ளிப் பருவப் பிள்ளைகளைத் தொடர்புபடுத்திக் கொள்வதன் மூலம் அவர்களில் ஒட்டுமொத்த அபிவிருத்தியை ஏற்படுத்துவதாகும். பிரதேச செயலக மட்டத்தில் பெற்றோரை விழிப்புணர்வூட்டல், அரசாங்க அலுவலர்களை விழிப்புணர்வூட்டல், இளைஞர் குழுக்களை விழிப்புணாவூட்டல் ஆகியன இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டில் பிரதேச செயலக மட்டத்தில் 335 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், அவற்றின் நிதி சார் முன்னேற்றம் ரூபா. 2.010 மில்லியன் ஆகும்.

## II.“போஷண மங்பெத” உணவு மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டம்

முன்பள்ளிப் பருவ பிள்ளைகளின் உணவு மற்றும் போஷாக்கு பற்றி பெற்றோரையும் பாலர் பாடசாலை ஆசியரையும் விழிப்பூட்டல், போஷாக்குமிக்க உணவுகளைத் தயார்செய்துகொள்ளும் முறைபற்றி விழிப்புணர்வூட்டுவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டில் சுமார் 280 நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வாறு பிரதேச செயலக மட்டங்களில் நடத்தப்பட்டதுடன், அதற்கென செலவிடப்பட்ட தொகை ரூபா. 2.8 மில்லியன் ஆகும்.

## III.“நெணதீபனீ” பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான ஒரு நாள் திசைமுகப்படுத்தும் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

பாலர் பாடசாலை ஆசிரியைகளின் அறிவை இற்றைப்படுத்தல் மற்றும் அவர்களின் ஆற்றல்களை விருத்திசெய்வது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டம் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் அமுல்படுத்தப்படுவதுடன்,2015 ஆம் ஆண்டின் வருடாந்த செயற்திட்டத்திற்கமைய 280 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. அதற்கென செலவிடப்பட்ட தொகை ரூபா. 2.8 மில்லியன் ஆகும்.

## IV.முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி பற்றிய டிப்ளோமா பாடநெறியைப் பதிவுசெய்யும் நிகழ்ச்சித்திட்டம்

முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி பற்றிய ஒரு வருட டிப்ளோமா (பாலர் பாடசாலை ஆசிரியை பயிற்சி) பாடநெறிகளை தேசிய மட்டத்திலான தரநியமங்களைக் கொண்டுள்ளதை உறுதிப்படுத்தி சிறுவர் செயலகத்தின் கீழ் பதிவுசெய்வது இதன் பிரதான நோக்கமாகும். இதன் கீழ் தேசிய மட்டத்திலான டிப்ளோமா பாடநெறிகள் 61 பதிவுசெய்யப்பட்டிருப்பதுடன், சகல நிறுவனங்களையும் பிரதிநிதித்துவம் செய்யக் கூடிய வகையில் பின்னாய்வு நிகழ்ச்சித்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய 2015 ஆம் ஆண்டில் ரூபா. 0.224 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## V.முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி பற்றிய தேசிய/ பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்

முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு ரூபா. 0.080 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய மட்டத்திலான முன்பள்ளிப் பருவ ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் இரண்டு நடாத்தப்பட்டதுடன், அதன் நிதிசார் முன்னேற்றம் 0.034 ஆகும்.

பிரதேச மட்டத்திலான முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு ரூபா. 1.2 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி நிதியைச் செலவிட்டு நாடு முழுவதும் 602 குழுக்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## VI.திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்/ முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி அலுவலர்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

இதன் கீழ் சிறுவர் செயலகத்தினால் பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி அலுவலர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் அறிவை இற்றைப்படுத்துவதற்குமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

2015 ஆம் ஆண்டில் திறன் விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்ட 09 நடாத்த திட்டமிடப்பட்ட போதிலும், ஆண்டின் இறுதியில் அவ்வாறான 12 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபா. 2.5 மில்லியன் ஆகும். அதன் மூலம் ரூபா. 1.88 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

வெளிக்களத்தில் கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மாவட்ட முன்பள்ளிப் பருவ ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் சேவையாற்றி வருகின்ற முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி உதவி அலுவலர்களுக்கு 135 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள்

நடாத்தப்பட்டிருப்பதுடன், அதற்கென ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் ரூபா. 0.720 மில்லியன் ஆகும். இதில் பதிவுசெய்யப்பட்டுள்ள நிதிசார் முன்னேற்றம் ரூபா. 0.24 மில்லியன் ஆகும்.

### VII.“டிக்கிரி மிதுரு” ஊடக பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் வெளியீடுகள்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக பொதுமக்களை விழிப்புணர்வூட்டுவதற்கு இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் பிரச்சார நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதும் அச்சிடப்பட்ட வெளியீடுகள்/ புத்தகங்களை வெளியிடுவதும் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்காக ரூபா. 1.029 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

### VIII. முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய கொள்கையை சட்டமாக மாற்றியமைத்தல்

முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய கொள்கை தற்போது அமுல்படுத்தப்பட்டு வருவதுடன், மேற்படி தேசிய கொள்கையை சட்ட ரீதியாக வலுவூட்டும் பொருட்டு சட்டமாக மாற்றியமைக்கும் பணிக்காக இந்த ஆண்டில் செலவிடப்பட்ட தொகை ரூபா. 0.029 மில்லியன் ஆகும்.

### IX. முன்பள்ளிப் பருவ அரவணைப்பு பற்றிய வலையமைப்பைப் பேணிவரல்

முன்பள்ளிப் பருவ அரவணைப்பு பற்றிய வலையமைப்பைப் பேணிவருவது தொடர்பான 3 கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதற்கென செலவிடப்பட்ட தொகை ரூபா. 0.02 மில்லியன் ஆகும்.

### X.முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்கள்/ பகல்நேர பராமரிப்பு நிலையங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

பாலர் பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான கற்றகைச் சூழலுக்கு அனுசரணை வழங்குவதன் கீழ் 2015 ஆம் ஆண்டில் பாலர் பாடசாலைகளுக்கு 35 விளையாட்டு முற்றங்களை நிர்மாணிப்பதற்கென ரூபா. 1.75 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டதுடன், மேற்படி தொகையிலிருந்து பாலர் பாடசாலைகள்/ முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையங்களில் 35 விளையாட்டு முற்றங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

2015 ஆம் ஆண்டு முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையம்/ பாலர் பாடசாலைகளின் கட்டிட மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கென ரூபா. 9.85 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அதற்கமைய

மதவாச்சி, லுணகம்வெஹர, அம்பன்கங்கோரளே,நெளுவ, நாச்சாதுவ, யட்டியாந்தோட்டை, படல்கும்புர, கெக்கிராவ மற்றும் போரதீவுப்பற்று ஆகிய பிரதேச செயலகங்களின் கீழான பிரதேசங்களிலுள்ள பாலர் பாடசாலைகளின் கட்டிடங்களை மறுசீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## XII.“அருண தகின ரட்டா” முன்பள்ளிப் பருவப் பிள்ளைகளின் சித்திரக் கண்காட்சியும் செயலமர்வும்

முன்பள்ளிப் பருவப் பிள்ளைகளின் ஆக்கபூர்வமான திறமைகளை வெளிப்படுத்துவதற்காக வருடாந்தம் நாடளாவிய ரீதியில் சித்திரக் கண்காட்சியொன்று நடாத்தப்படுகின்றது. இதற்கு நாட்டிலுள்ள அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பாலர் பாடசாலைப் பிள்ளைகளின் சித்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படுவதுடன், அவற்றிலிருந்து தெரிவுசெய்யப்படுகின்ற 500 சித்திரங்களை உள்ளடக்கியதாக இந்தக் கண்காட்சி கொழும்பில்

நடாத்தப்பட்டு, குறித்த பிள்ளைகளுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. 2015.09.03 ஆம் திகதி கொழும்பு தேசிய கலாபவனத்திலும் கிறீன்பாத் புதிய நகர மண்டபத்திலும் அருண தெகின்ன ரட்டா சித்திரக் கண்காட்சி மற்றும் பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கி வைக்கும் வைபவம் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இதற்கென செலவிடப்பட்ட தொகை ரூபா. 2.0 மில்லியன் ஆகும்.

## XIII.முன்பள்ளிப் பருவ மாதிரிக் கிராமங்கள்

நாட்டிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பிரதேச செயலகங்கள் ஊடாக மேலும் தெரிவுசெய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து பொருத்தமான கிராமங்களைத் தேர்ந்தெடுத்து மேற்படி கிராமங்கள் “மாதிரி முன்பள்ளிப் பருவ அபிவிருத்திக் கிராமங்கள்” என குறிப்பிட்டு மேம்படுத்தப்படுகிறது. இதன்போது குறித்த கிராமத்தை மையமாகக் கொண்டு தாபிக்கப்பட்டுள்ள பாலர் பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்படுகின்றதொரு பாலர் பாடசாலை மாதிரிப் பாடசாலையாக (முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி நிலையம்) அபிவிருத்தி செய்யப்படுவதுடன், குறித்த பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையம் சிறுவர் நட்புறவு நிலையமாக மேம்படுத்தப்படும் அதற்காக பொலிஸ் நிலையத்தில் சிறுவர் பூங்காவொன்றைத் தாபித்தல், சுகாதார சிகிச்சை முகாம்களை நடாத்தல், விழிப்புணர்வூட்டும் செயலமர்வுகளை நடாத்தல், பாலர் பாடசாலைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இங்கு மேற்படி கிராமத்தை மையமாகக் கொண்ட மக்கள் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி பற்றி அறிவுறுத்தப்படுவதுடன், உணர்வுபூர்வமானவர்களாக மாற்றியமைப்பது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். 2015 ஆம் ஆண்டில் இவ்வாறான 10 மாதிரிக் கிராமங்களைத்

தாபிக்கவென ரூபா. 3 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அவற்றின் மூலம் 07 மாதிரிக் கிராமங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன், அதற்கென ரூபா. 2.94 மில்லியன் செலவிடப்பட்டது.

## XIV. முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய வாரம்

2010 ஆம் ஆண்டில் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டமொன்றான இந்த நிகழ்ச்சித்திட்டம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்படுகின்றது. இதன் கீழ் தேசிய வாரத்தின் 7 நாட்களிலும் குறித்த பல்வேறு இலக்குக் குழுக்களுக்கான செயலமர்வுகள், கல்விச் சுற்றுலாக்கள்,அனுபவப் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள், பாலர் பாடசாலைகளுக்கான கற்கை உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுதப்படுகின்றன. இந்த தேசிய வாரத்தின் போது இலத்திரனியல், அச்சு மற்றும் வேறு ஊடகங்கள் மூலம் முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி பற்றி பொதுமக்களை அறிவுறுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது,

2015 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா. 5 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா. 6.76 மில்லியன் செலவாகியுள்ளது. அதற்கமைய சகல பிரசேத செயலகங்கப் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் பிரதேச ரீதியான நிகழ்ச்சித்திட்டங்களும் தேசிய 7 நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன.

## XV. சிறுவர் செயலகத்தில் முன்பற்றிப் பருவ அபிவிருத்தி வள நிலையமொன்றை நிர்மாணித்தல்

முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றி தற்போது அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, இது சம்பந்தமான தகவல்களைச் சேகரிக்க முனைகின்ற ஆட்கள் மேற்படி விடயம் சம்பந்தமாக அறிந்துகொள்வதற்கு இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்கின்ற கேந்திர நிறுவனமான சிறுவர் செலயகத்திற்கு வருகை தருகின்றனர். அவ்வாறு வருகை தருகின்ற ஆட்களின் உபயோகத்திற்காக வள நிலையமொன்றை சிறுவர் செயலகத்தில் பேணிவரப்படுகின்றது. இதற்காக 2015 ஆம் ஆண்டில் ரூபா. 1.5 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன், மேற்படி தொகையில் ரூபா. 0.620 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது.

## XVI.சர்வதேச சிறுமியர் தின நிகழ்ச்சித்திட்டங்கள்

சிறுமியரின் பாதுகாப்பு மற்றும் பெண் பிள்ளைகளை வலுவூட்டுவதற்காக துஷ்பிரயோகம் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும் போது பெண் பிள்ளைகளின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல், பெண் பிள்ளைகளுக்கு எதிரான துன்புறுத்தல்களை கட்டுப்படுத்தல், பெண் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களுக்கு நல்லதொரு வாழ்க்கையைப்

பெற்றுக்கொடுப்பதற்கு வாய்ப்பினைச் செய்துகொடுத்தல் போன்ற விடயங்கள் ஒக்டோபர் 11 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற சர்வதேச சிறுமியர் தினத்தின் பிரதான நோக்கங்களாகும். அதற்கமைய 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் 25 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா. 0.5 மில்லியன் ஆகும்.

## XVII.அவசர சந்தர்ப்பங்களின் போதான முன்பள்ளிப் பருவ அரவணைப் புமற்றும் அபிவிருத்தி பற்றிய நிகழ்ச்சித்திட்டம்

முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் ஆரம்பத்தில் திட்டமிடாத தேவைகளுக்கு அவ்வவ் சந்தர்ப்பங்களின் கோரிக்கைக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூபா. 0.4 மில்லியன் ஆகுமென்பதோடு,மேற்படி முழுத்தொகையும் 2015 ஆம் ஆண்டின் இறுதிக்குள் செலவிடப்பட்டுள்ளது.

## XVIII.நிருவாக செலவினம்

சிறுவர் செயகலத்தின் ஏற்பாடுகளின் அடிப்படையில் வெளிக்களத்தில் அமுல்படுத்தப்படுகின்ற பல்வேறு வகையான முன்பள்ளிப் பருவ அரவணைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய நிகழ்ச்சித்திட்டங்களைக் கண்காணிப்புச் செய்யும் நடவடிக்கைகளுக்கு 2015 ஆம் ஆண்டின் செயற்றிட்டத்தின் மூலம் ரூபா. 0.040 மில்லியன் ஆன தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தொகையும் 2015 ஆம் ஆண்டின் இறுதிக்குள் செலவிடப்பட்டுள்ளது.

*முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி தேசிய வாரம்*





